செய்திக் குறிப்பு   dt: 10.01.18

காரைக்கால் நகராட்சிப் பகுதிகளில் சேகரிக்கப்படும் மாமிச மற்றும் உணவுக் கழிவுகளிலிருந்து மீத்தேன் வாயு தயாரிப்பதற்கும் மற்றும் அந்தக் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கும் புதுச்சேரி அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் நிதிஉதவியுடன் காரைக்கால் பறவைப்பேட் வளம் மீட்பு பூங்காவில் பயோகேஸ் பிளாண்ட் அமைக்க காரைக்கால் நகராட்சியால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு ஒரு மெட்ரிக்டன் மாமிச மற்றும் உணவுக்கழிவுகளைப் பயன்படுத்தக்கூடிய அளவில் இந்த பயோகேஸ் (Bio gas) பிளாண்ட் ரூபாய் 28,78,000/- செலவில் அமைக்கப்படுகிறது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று 10.01.2018 காலை 11.00 மணியளவில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. V. நாராயணசாமி முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் மற்றும் வேளாண்துறை அமைச்சர் திரு. கமலக்கண்ணன் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அசனா மற்றும் திருமதி கீதா ஆனந்தன், மாவட்ட ஆட்சியர், சார்பு ஆட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் கலந்து கொண்டார்கள்.

செ.
10/1/18